NST Campus

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

தரம் 08	கணிதம்	1.30 மணித்தியாலம்

சுட்டிலக்கம் : .... புள்ளிகள்

01. 25, 18, 11, 4 ...., ... எனும் எண் கோலத்தின் அடுத்துவரும் இரு உறுப்புக்களையும் எழுதுக.

02. $-20 + \square = 7$ வெற்றுக் கூண்டினுள் வரவேண்டிய எண் யாது?

03. முக்கோணி ABC இல் $B\hat{A}C$ இன் பருமனைக் காண்க.



04. தீர்க்க. $2(3x-1) = 10$

05.



எண்கோட்டில் காட்டிய சமனிலியை எழுதுக.

06. a= -4 எனின் 5-2a இன் பெறுமானத்தைக் காண்க?

07. P = { 1, 4, 9, 16 } எனின் தொடை P ஐ விபரித்து எழுதுக.



08. O வை மையமாகவுடைய வட்டத்தில் நிழற்றப்பட்ட பகுதியைப் பெயரிடுக.



i. X ....

ii. Y ....

09. 3, 7, 8, 3, 5, 4, 6, 7, 3 என்ற எண்பரம்பலின்

i. ஆகாரம் ....

ii. இடையம் ....

10. 0.083 ஐ

I. பின்னமாக எழுதுக. ....

II. சதவீதமாக தருக. ....

11. 1 தொடக்கம் 8 வரை இலக்கமிடப்பட்ட அட்டைகள் அடங்கிய பெட்டி ஒன்றிலிருந்து எழுமாறாக ஒரு அடடையைத் தெரிவு செய்யும்போது அது ஒற்றை எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

12. இத்தெசலாக்கத்தின் பெயரைக் குறிப்பிடுக.



13. மொத்த மேற்பரப்பளவு 294cm^2 ஆகவுடைய சதுரமுகியொன்றின் ஒரு விளிம்பின் நீளத்தைக் காண்க?

14. சுருக்குக.

$20.7 \div 1.5$ ....

15. 

தரப்பட்ட செவ்வகத்தின் சுற்றளவுக்கான கோவையை காரணிப்படுத்தி எழுதுக.

16. 

AB ஒரே நேர்கோடாயின் a இன் பெறுமானத்தைக் காண்க.

17. 1:5 எனும் அளவிடையில் வரையப்பட்ட ஓர் அளவிடைப் படத்தில் 8cm இனால் வகைக் குறிக்கப்படும் உண்மை நீளத்தைக் காண்க.

18. 

நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.

19. (+8) நேர வலயத்திலுள்ள நாடு ஒன்றில் நேரமானது 16:30 ஆகும் போது (-5) நேரவலயத்திலுள்ள பிரேசிலின் நேரம் என்ன?

20. நான்கு மாணவர்களின் இடைநிறை 42Kg எனின் அந்நான்கு மாணவர்களினதும் மொத்த நிறையைக் காண்க.

பகுதி - II

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. 40 புள்ளிகள் வழங்கப்பட்ட வினாப்பத்திரம் ஒன்றுக்கு குறித்த வகுப்பு ஒன்றில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு.

08	18	20	29	35
13	37	09	11	38
27	28	19	27	21
35	16	33	35	34
32	29	37	24	27

i. மேறகுறித்த தரவுகளை தண்டு-இலை வரைபில் குறிக்க.

இத்தரவுகளின்

ii. ஆகாரம் யாது?

iii. இடையத்தைக் காண்க.

iv. இழிவுப் பெறுமானம் யாது?

v. உயர்வுப் பெறுமானம் யாது?

vi. வீச்சைக் காண்க.

vii. 30 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை மொத்த மாணவர்களின் சதவீதமாகத் தருக.

02. a.



மேலே தரப்பட்ட உருவில்

(i) x இன் பெறுமானம் யாது?

(ii) y இன் பெறுமானம் யாது?

b.



தரப்பட்ட உருவில் பின்வரும் கோணங்களின் பெறுமானங்களைக் காண்க.

(i) a ....

(ii) b ....

c. x=1, y= -13, z=0 ஆகும் போது பின்வரும் கோவைகளின் பெறுமானங்களைக் காண்க.

i. $x(2z+4y)$ ii. $5z-3x-y$

03. (a) (i) ஆரை 4cm ஆகவுள்ள வட்டம் ஒன்றை வரைக.

(ii) அதன் மிகப் பெரிய நாணை வரைந்து அளந்து எழுதுக.

(iii) 6cm நீளமான நாண் PQ ஐ வரைக.

(iv) சீறித்துண்டத்தை நிழற்றிக் காட்டுக.

(b) (i) கவராயத்தையும் நேர்விளிம்பையும் பயன்படுத்தி AB=6cm, BC=5.5cm, AC=5.5cm ஆகவுள்ள Δ ABC ஐ அமைக்க.

(ii) $A\hat{B}C$ ஐ அளந்து எழுதுக.

---

04. (a) சுருக்குக.

(i) $3(2x-4) -2 (x+1)$

(b) (-5) தொடக்கம் (+5) வரை இலக்கமிடப்பட்ட ஆள்கூற்றுத்தளம் ஒன்று தரப்பட்டுள்ளது.



(i) அவ் ஆள்கூற்றுத்தளத்தில் A (-4, 3), B (2,3), C(2,-1), D(-4,-1) ஆகிய புள்ளிகளைக் குறித்து முறையாக இணைக்க.

(ii) பெறப்பட்ட உருவின் இரு சமச்சீர் அச்சுக்களையும் வரைந்து அவற்றின் சமன்பாடுகளை எழுதுக.

---

05. (a) i. சுருக்குக.

$1\frac{3}{4} + 2\frac{1}{2}$ ii. $2\frac{2}{3} \div \frac{8}{9}$

(b) முஹம்மட் A எனும் இடத்திலிருந்து மேற்குத் திசையில் 80m தூரம் நடந்து B எனும் இடத்தை அடைந்து அங்கிருந்து வடக்கு 40^0 கிழக்கு திசையில் 100m சென்று C எனும் இடத்தை அடைந்தான். இத்தகவலை பருமட்டான படம் ஒன்றில் காட்டுக.

(c) செவ்வக வடிவப் பூப்பாத்தி ஒன்றின் நீளம் 14m உம் அகலம் 8m ஆகும். 1:200 எனும் அளவிடையில் பூப்பாத்தியை வரைக.

06. (a) நீளம், அகலம், உயரம் முறையே 10cm, 10cm, 14cm ஆகவுடைய கனவுரு வடிவ மரக்குற்றியொன்று உருவில் காட்டப்பட்டுள்ளது.



(i) சதுர முகம் ஒன்றின் பரப்பளவு யாது?

(ii) செவ்வக முகம் ஒன்றின் பரப்பளவு யாது?

(iii) மரக்குற்றியின் மொத்த மேற்பரப்பளவைக் காண்க.

(iv) இதன் கனவளவைக் காண்க.

(v) மேலே தரப்பட்ட கனவுருக் குற்றியைக் கொண்டு 2cm நீளமுடைய எத்தனை சதுரமுகிக் குற்றிகளை அமைக்கலாம்?